**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 397/2015**

**2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

பி.வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்.,சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**DW- 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலசுப்ரமணியன் | த/பெ.: | நாராயணசாமி |
| கிராமம்: | ஒரத்தூர் | தாலுக்கா: | நீடாமங்கலம் |
| மதம்: | | தொழில்: | ஓட்டுனர் |
| வயது: | 58 | முகவரி: | சித்தமல்லி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 20.01.2026.

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் பிரதிவாதி ஆவேன் . பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 03.01.1994 | நீடாமங்கலம் தனிவட்டாட்சியர் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் 1ம் பிரதிவாதி பாலசுப்ரமணியன் பெயரில் வழங்கிய மனைவரி தோராய பட்டா | அசல் |
| பி.வா.சா.ஆ.2 | 03.01.1994 | நீடாமங்கலம் தனிவட்டாட்சியர் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் 1ம் பிரதிவாதி பாலசுப்ரமணியன் தந்தை பெயரில் வழங்கிய மனைவரி தோராய பட்டா | அசல் |
| பி.வா.சா.ஆ.3 | | 28.03.2003, 24,04,2021, 05.02.2025 - சித்தமல்லி மேல்பாதி ஊராட்சியால் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் (கோர்வை 4) | அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 20.11.2011 | வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் | நகல் |
| பி.வா.சா.ஆ.5 | | மின் கட்டண அட்டை | அசல் |

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(பி.வா.சா.ஆ.4 ஆவணம் ஜெராக்ஸ் என்பதால் ஆட்சேபிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே 20.11.2011ம் தேதியிட்ட அசல், பாகப்பிரிவினை பத்திரம் தன்வசம் இருப்பதாக வா.சா..1 குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டார் என்றும் அந்த ஆவணத்தை ஒப்படைக்கச் சொல்லி நீதிமன்றம் உத்தரவிட்டும் அவர் ஒப்படைக்கவில்லை என்றம் ஆகவே அந்த ஆவணத்தின் ஜெராக்ஸ் ஐ தாக்கல் செய்வதாக கூறினார். மேற்படி ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணமாக இருப்பதால் எந்தவொரு ஆவணத்தையும் குறியீடு செய்யலாம் என்ற உச்சநீதிமன்ற வழிக்காட்டுதலின்பேரில் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட்டது).

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசார</u>ணை - வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.